**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை**

**முன்னிலை:– திருமதி.ரா.பிரேமி, B.A., L.L.B., (Hons).,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தேவகோட்டை.**

**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10 ஆம் நாள் புதன் கிழமை**

**IA.No.03/2023**

**in**

**OS.No.26/2023**

இராமசுப்பிரமணியன் ...மனுதாரர்

–எதிர்–

1. கோவிந்தன்
2. செந்தி
3. சுரேஷ் ...எதிர்மனுதாரர்கள்

இவ்வழக்கு கடந்த 10.09.2025ம் தேதி என் முன்னிலையில் இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சேகர் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3ம் எதிர்மனுதாரர் 13.06.2024 அன்று தோன்றா தரப்பினரானதாலும், இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலினை செய்தும் இதுநாள் வரையும் இந்நீதிமன்றத்தில் பரிசீலினைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

சி.பி.சி ஆர்டர் XXXIX ரூல் 1 மற்றும் 2 சி.பி.சி.செக்ஷன் 151–ன்படி தாக்கல் செய்யும் மனு

**1. வாதியின் வழக்குரையின் சுருக்கம்:**

1(i). இந்த வழக்கில் மனுதாரர் வாதி ஆவார். எம்.நெட்டேந்தல் என்ற கிராமத்தில் உள்ள தனக்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்களில் ஒவ்வொரு வருடமும் நெல் விவசாயம் செய்தும் வாழ்ந்து வருகின்றார் என்றும், இந்த வழக்கின் தாவாச் சொத்து என்பது எம்.நெட்டேந்தல் கிராமத்தில் சர்வே எண் 161/12–ல் உள்ள 0.03.1 ஏர்ஸ் விஸ்தீர்ணம் கொண்ட அரசாங்கத்திற்கு சொந்தமான புறம்போக்கு இடம் என்றும், மனுதாரரின் தகப்பனார் வேலு என்பவர் கடந்த 1958–ம் ஆண்டு வாக்கில் எம்.நெட்டேந்தல் கிராமத்தில் சர்வே எண் 161/12–ல் உள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான 0.03.1 ஏர்ஸ் விஸ்தீர்ணம் கொண்ட இடத்தினுள் நடுப்பகுதியில் சுமார் 3 செண்டு இடத்தினுள் கிழக்கு பக்கமாக வாசல் வைத்து ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கட்டியும் வழிபாடு செய்து வந்ததைத் தொடர்ந்து மனுதாரர் எம்.நெட்டேந்தல் கிராமத்தைச் சேர்ந்த மக்களும் சர்வே எண் 161/12ல் இடத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் வழிபாடு செய்து வருகின்றார் என்றும், ஸ்ரீ முத்துமாரியம்மன் தெய்வத்திற்கு மனுதாரர் குடும்பத்தார்களும் எம்.நெட்டேந்தல் கிராமத்தைச் சேர்ந்த மக்களும் பூஜைகள் செய்தல் மற்றும் சிறப்பு பூஜை வகையறாக்களை

நடத்துதல் திருவிழாக்கள் நடத்துதல் போன்றவற்றை எந்தவித பிரச்சனைகளும் இல்லாமலும் மிகவும் நல்லமுறையில் நடத்தியும் வந்துள்ளார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள் தாவாச் சொத்தினுள் கடந்த 15.03.2023ம் தேதியன்று அக்கிராமப் பிரவேசம் செய்ய எத்தனம் செய்துள்ளார்கள் என்றும், அதனை மனுதாரர் தடுத்துள்ளார் என்றும் கூறுகிறார்.

1(ii). ஊரில் உள்ள பெரிய மனிதர்களிமடம் சொல்லி பல பஞ்சாயத்துக்கள் வைத்தும் எதிர்மனுதாரர்கள் கட்டுப்படவில்லை என்றும் எதிர்மனுதாரர்கள் சர்வே எண் 161/12–ல் அமைந்துள்ள ஸ்ரீமுத்துமாரியம்மன் தெய்வத்தை மனுதாரரின் குடும்பத்தார்களும் தெய்வ வழிபாடு செய்வதை சட்டத்திற்கு முரணாக தடுத்தது சம்பந்தமாக இந்த வழக்கினை கடந்த 12.12.2022ம் தேதியன்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், தேவகோட்டை கோட்டாட்சியர் அவர்களுக்கும், தேவகோட்டை வட்டாட்சியர் அவர்களுக்கும் நேரிடையாக மனுக்கள் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று எம்.நெட்டேந்தல் என்ற கிராமத்தில், எதிர்மனுதாரர்கள் கூட்டாக சேர்ந்து கொண்டு ஸ்ரீமுத்துமாரியம்மன் தெய்வத்திற்கு சொந்தமான பணத்தையும், தங்க நகைகளையும், பாத்திரங்களையும் மனுதாரரின் குடும்பத்தார்களுக்கும் தெரியாமலும் எம்.நெட்டேந்தல் கிராமத்தில் வசிக்கும் மற்றவர்களுக்கும் தெரியாமலும் எடுத்து சென்று விட்டதால்

எதிர்மனுதாரர்கள் மீது மனுதாரர் கடந்த 09.11.2022ம் தேதியன்று தேவகோட்டை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களிடம் புகார் கொடுத்துள்ளார் என்றும், அதன் மீது எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கூறுகிறார். இந்த வழக்கின் மனுதாரர் குடும்பத்தையும் கிராமத்தை விட்டு ஒதுக்கி வைத்து கிராமத்தார்கள் யாரும் மனுதாரரின் குடும்பத்தார்களிடம் பேசக்கூடாது என்றும், ஸ்ரீ முத்துமாரியம்மன் தெய்வத்திற்கு விசேசங்கள் நடத்துவதற்கு மனுதாரர் வரி வசூல் செய்யக் கூடாதென்றும் வாதியையும் வாதியின் குடும்பத்தார்களையும் எம்.நெட்டேந்தல் கிராமத்தில் இருந்து ஒதுக்கி வைத்துள்ளார்கள் என்றும் கூறுகிறார்.

1(iii). மனுதாரர் மீது எவ்விதமான காவியட்டும் நிலுவையில் இல்லை என்றும், தாவா வழக்கில் ப்ரைமாபேசி கேசும் பாலன்ஸ் ஆப் கன்வீனியன்சும் எனக்கு சாதகமாகவே இருக்கிறது என்றும், வாதியின் குடும்பத்தார்கள் ஒன்று சேர்ந்து அமைதியான முறையில் சுவாமி வழிபாடு செய்வதை எதிர்மனுதாரர்கள் அவரது வகையாட்களும், தடைசெய்யக் கூடாது என்று எதிர்மனுதாரர்களுக்கு எதிராக எக்ஸ்பார்ட்டியாக இடைக்கால தடையிடர் உத்தரவு செய்தும் அத்துடன் அறிக்கை அனுப்பியும், இவ்வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர்கள் தடையிடர் செய்யக் கூடாதென தற்காலிக உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**2. 1,2,3 எதிர்மனுதார்களின் வழக்குரையின் சுருக்கம்:**

எதிர்மனுதார்கள் வழக்கில் தோன்றா தரப்பினரானதால் எதிர் உரை எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**3. இப்போது தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி யாதெனில், இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா என்பதாகும்?**

3(i). மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரரின் வாதம் கேட்கப்பட்டது. இம்மனுவானது எம்.நெட்டேந்தல் என்ற கிராமத்தில் உள்ள ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவிலில் மனுதாரரரும் அவரது குடும்பத்தினரும் வழிபாடு செய்வதை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/4 முதல் 6 பிரதிவாதிகள் தடையிடர் செய்யக்கூடாது என்று தாவா வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தனது மனுவில் தாவா கோவிலில் பல ஆண்டுகாளாக மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் துஅவர்களது முன்னோரைத் தொடர்ந்து வழிபாடு செய்து வருவதாகவும்,ஆனால் இதனை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/4 முதல் 6 பிரதிவாதிகள் தடுத்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/4 முதல் 6 பிரதிவாதிகள் ஸ்ரீ முத்துமாரியம்மன் தெய்வத்திற்கு சொந்தமான பணத்தையும் தங்க நகைகளையும் பாத்திரங்களையும் மனுதாரர் மற்றும் ஊர் பொதுமக்களுக்கு தெரியாமல் எடுத்துச் சென்று விட்டதாகவும், அதனால் மேற்படியாரின் மீது தேவகோட்டை தாலுகா காவல்

நிலையத்தில் புகார் அளித்ததாகவும் புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு தாவா கோவிலில் எவ்வித தனித்த பாத்திய அனுபவமும் இல்லை என்றும், ஆனால் அவர்கள் மனுதாரரையும் அவரின் குடும்பத்தார்களையும் கிராமத்தை விட்டு ஒதுக்கி வைத்தும் தாவா கோவிலில் விசேஷங்கள் நடத்துவதற்கும் மனுதாரரிடம் வரி வசூல் செய்யக்கூடாது என்று கூறி ஒதுக்கி வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

3(ii). இம்மனுவில் எதிர்மனுதாரர்கள் வழக்கறிஞர் மூலமாக ஆஜராகியும் எதிர் உரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினராக அறிவிக்கப்பட்டனர். மனுதாரரின் மனு மற்றும் வாதத்தை பரிசீலிக்கையில் மனுதாரர் தன் தரப்பில் உள்ள முகாந்திரத்தை நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இம்மனுவிற்கான சமநிலை தன் பக்கம் இருப்பதை இம்மனுதாரர் நிரூபித்துள்ளார். மேலும் இம்மனுவை அனுமதிக்காமல் போனால் மனுதாரர் தாவா கோவிலில் தெய்வ வழிபாடு செய்ய முடியாமல் போகும் என்பதையும் மனுதாரர் நிரூபித்துள்ளார். மனுதாரரின் கூற்றுக்களை பொய்ப்பிக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள் தன் தரப்பில் எந்தவிதமான எதிர் உரையோ, ஆவணத்தையோ முன்னிருத்தவில்லை. மனுதாரர், தன் மீது சுமத்தப்பட்ட மெய்ப்பிக்கும் சுமையை நிரூபித்து, இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்குவதற்கு

தேவையான காரணிகளையும் பூர்த்தி செய்துள்ளார். ஆகையால் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. தாவா வழக்கு முடியும் வரை எம்.நெட்டேந்தல் என்ற கிராமத்தில் உள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் மனுதாரரும் அவரது குடும்பத்தார்களும் தெய்வ வழிபாடு செய்வதனை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/4 முதல் 6 பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ எந்தவித தடையிடர் செய்யக்கூடாது என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவு தொகை இல்லை.

4. **தீர்ப்பு:**

**முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. தாவா வழக்கு முடியும் வரை எம்.நெட்டேந்தல் என்ற கிராமத்தில் உள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் மனுதாரரும் அவரது குடும்பத்தார்களும் தெய்வ வழிபாடு செய்வதனை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/4 முதல் 6 பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ எந்தவித தடையிடர் செய்யக்கூடாது என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவு தொகை இல்லை.**

இத்தீர்ப்பு எனது உத்தரவின்படி கூறப்பட்டு, சுருக்கெழுத்துச் தட்டச்சர் மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, எனது திருத்தத்திற்குப் பிறகு, 2025 செப்டம்பர் மாதம் 10ஆம் நாளன்று இந்த திறந்த நீதிமன்றத்தில் நான் அறிவித்தேன்.

PREMI R Digitally signed by PREMI R Date: 2025.09.10 15:57:02 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**தேவகோட்டை.**

**<u>சான்றாவணங்கள்:</u>**

மனுதாரர் தரப்பின் சாட்சிகள் – எதுவுமில்லை –

மனுதாரர் தரப்பின் ஆவணங்கள் – எதுவுமில்லை –

எதிர்மனுதாரர்கள் தரப்பின் சாட்சிகள் – எதுவுமில்லை –

எதிர்மனுதாரர்கள் தரப்பின் ஆவணங்கள் – எதுவுமில்லை –

PREMI R Digitally signed by PREMI R Date: 2025.09.10 15:57:10 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**தேவகோட்டை.**

மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம்,
தேவகோட்டை.
IA.No.03/2023

in

OS.No.26/2023

உத்தரவு நாள்: 10.09.2025

-----------------------

சீரான/வரைவு உத்தரவு

-----------------------